தமிழ் நாடு மின் தொடரமைப்புக் கழகம்
மேற்பார்வை பொறியாளர் / இயக்கம்/ திருப்பெரும்புதூர்
திருப்பெரும்புதூர் 400 கி. வோ. துணை மின் நிலைய வளாகம்
பென்னலூர் / திருப்பெரும்புதூர் – 602 117

விவரக் குறிப்பீடு எண் L.T. NO.02/2026-27

செயற்பொறியாளர் / இயக்கம் / 230 கி. வோ. துணை மின் நிலையம் / சிப்காட் மாம்பாக்கம் அவர்களின் ஆய்வு பணி மற்றும் அது தொடர்பான வேலைகளுக்கான டீசல்/பெட்ரோலில் இயங்கும் கார்/ஜீப் ( Car/Jeep) மாடல் வாகனம் வாடகைக்கு பெறல். (One year)

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி விற்பனைக்கான இறுதி நாள் / நேரம் | 28.04.2026 அன்று பிற்பகல் 2.00 மணி<br>மேலே குறிக்கப்பட்டுள்ள நாள் விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் அடுத்த வேலை நாள் பிற்பகல் 2.00 மணி |
| ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்/நேரம் – | 28.04.2026 அன்று பிற்பகல் 3.00 மணி<br>மேலே குறிக்கப்பட்டுள்ள நாள் விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் அடுத்த வேலை நாள் பிற்பகல் 3.00 மணி |
| முன்வைப்புத் தொகை (ஈ எம் . டி) - | ரூ.5000/- (ஒவ்வொரு ஊர்திக்கும்) |
| விவரக் குறிப்பீட்டின் விலை – | ரூ.250/- |

தபால் செலவு ரூ. 100/- தனி.

மேலும் விவரக் குறிப்பீட்டினை www.tneb.tnebnet.org – என்ற இணையவழியாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒம் . . .
மேற்பார்வை பொறியாளர்
இயக்கம்/ திருப்பெரும்புதூர்

பிரிவு III

**மேற்பார்வை பொறியாளர் / இயக்கம்/ திருப்பெரும்புதூர்**

விவரக் குறிப்பீடு எண் L.T. NO.02/2026-27.

1. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்களுக்கு அறிவுரை ;-

செயற்பொறியாளர் / **இயக்கம்** / 230 கி. வோ. துணை மின் நிலையம் / சிப்காட் மாம்பாக்கம் அவர் **க**ளின் ஆய்வு பணி மற்றும் அது தொடர்பான வேலைகளுக்கான ஒப்பந்த ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்கு டீசல்/பெட்ரோலில் இயங்கும்கார்/ஜீப் ( Car/Jeep) மாடல் வாகனம் வாடகைக்கு பெறுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. இவ்விவரக் குறிப்பீட்டில் கேட்கப்பட்டுள்ள விவரங்களுடன் முன் வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரங்களும் தெளிவாக எழுதப்படவேண்டும். ஒப்பந்த புள்ளியை உறையினுள் வைத்து அதை முத்திரையிட்டு அனுப்புமாறு ஒப்பந்ததாரர்கள் கோரப்படுகிறார்கள். மேல் உறையின் மீது விவரக் குறிப்பீடு எண் மற்றும் **பணி**யின் விவரம் தவறாமல் எழுதப்படவேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளி முறை - (டென்டர் சிஸ்டம்)

வரையறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி முறை" (Limited Tender Double cover System) பின்பற்றப்படும். ஒப்பந்தப்புள்ளி கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு தனித்தனி மூடி முத்திரையிடப்பட்ட உறையில் உறை A மற்றும் உறை B என்று குறியிடப்பட வேண்டும்.

.

உறை A என்னும் முதல் உறை கீழ்கண்ட தகவல்களை உள்கொண்டிருத்தல் வேண்டும்.

1. படிவம் I
2. படிவம் III, அதற்கான சான்றொப்பமிடப்பட்ட அத்தாட்சி இணைக்கப்பட வேண்டும்
3. மெயின் மற்றும் மாற்று ஊர்திகளுக்கான கீழ்க்கண்ட ஆவணங்கள் நகல்கள்

அ. ஆர் சி சான்றிதழ்

ஆ. ஈட்டுறுதி ஆவணம்

இ. போக்குவரத்து உரிமம்

4. ஒப்பந்ததாரருக்கு பொருந்துகின்ற சேவை வரி பதிவு பற்றிய விவரங்கள்.
5. முன்வைப்புத் தொகைக்கான சான்று. (ஈ.எம்.டி)

முன்வைப்புத் தொகை (ஈ.எம்.டி) செலுத்தியதற்கான ரசீது அல்லது கேட்புக் காசோலை (Demand Draft) அல்லது பணம் கொடுப்பாணை (Pay Order) விவரக் குறியீட்டில் குறிப்பிடப்பெற்ற ஒப்பந்த நிபந்தனையின் படி கொடுக்கப்பட வேண்டும்.

படிவம் **II**-ல் வழங்கப்படும் ஊர்திகளுக்கான வாடகைக் கட்டணம் பூர்த்தி செய்யப்பட்டு இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

நன்கு முத்திரையிடப்பெற்ற மூடப்பட்ட உறையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியாளருக்கு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் அன்று பிற்பகல் 02.00 மணிக்குள் வந்து சேருமாறு அனுப்பப்படவேண்டும்.

மேற்கண்ட முறையில் கோரப்பட்டவாறு வரப்பெறாத ஒப்பந்தப்புள்ளிகள் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்.

